**தாருல் ஹுதா அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைகளுக்கான மகளிர் கல்லூரி, மருதமுனை.**

நடாத்தும்

**சர்வதேச அரபு மொழி போட்டி நிகழ்ச்சிகள் - டிசம்பர் 2024**

❖ **போட்டியில் கலந்து கொள்பவர்கள் :**
கல்லூரியில் 1ம், 2ம், 3ம் மற்றும் 4ம் தரங்களில் கல்வி பயிலும் மாணவிகள்.

❖ **பிரிவுகள்** :

- **கனிஷ்ட பிரிவு** - தரம் 1 மாணவிகள்.
- **சிரேஷ்ட பிரிவு** - தரம் 2 மற்றும் தரம் 3 மாணவிகள்.
- **விஷேட பிரிவு** - தரம் 4 மாணவிகள்.

❖ **நடுவர்கள்** : கல்லூரி விரிவுரையாளர்கள்.

❖ **போட்டிகள் இடம் பெறும் காலம் :** டிசம்பர் மாதம் 16,17,18ம் திகதிகள்

❖ **போட்டியாளர்களுக்கான பொதுவான விதிமுறைகள் :**

1. கல்லூரியில் தற்போது கல்வி பயிலும் மாணவியாக இருத்தல்.
2. ஒரு மாணவி அதிகபட்சம் இரண்டு நிகழ்ச்சிகளில் மாத்திரமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
3. நிகழ்ச்சிகள் யாவும் அரபு மொழியில் அமைய பெறல் அவசியம்.
4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை **2024-12-08**ம் திகதிக்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைத்தல்.
5. சம புள்ளிகளை எடுக்கும் வெற்றியாளர்களில் முதல் மூன்று இடங்கள் நடுவர்களால் குலுக்கள் முறையில் தெரிவு செய்யப்படல்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.
7. போட்டிகளில் தேர்வு செய்யப்படும் மிக சிறந்த நிகழ்ச்சிகள் இறுதி நிகழ்வில் அரங்கேற்றப்படும்.
8. முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள், வெகுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

❖ **போட்டி நிகழ்ச்சிகள்** :

### 1. அல்-குர்ஆன் மனனப் போட்டி.

**நிபந்தனைகள் :**

➢ மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
➢ கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவிகள் கலந்து கொள்ளல்.
➢ அல்-குர்ஆனை தஜ்வீத் முறை பேணி, பிழையின்றி ஓதுதல்.

**மனனம் செய்ய வேண்டிய பகுதி :**

➢ **கனிஷ்ட பிரிவு** : ஜுஸ்உ அம்ம (அரைப் பகுதி)
➢ **சிரேஷ்ட பிரிவு** : ஜுஸ்உ அம்ம (முழுமையாக)

### 2. ஹதீஸ் மனனப் போட்டி.

**நூல் :** அல்-அர்பஊன் அன்-நவவிய்யா, இமாம் நவவி (றஹ்).

**நிபந்தனைகள் :**

➢ மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
➢ கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவிகள் கலந்து கொள்ளல்.
➢ ஹதீஸ்கள் அதன் மொழிபெயர்ப்புடன் மனனம் செய்தல்.

**மனனம் செய்ய வேண்டிய பகுதி :**

- **கனிஷ்ட பிரிவு** : 10 ஹதீஸ்கள்.
- **சிரேஷ்ட பிரிவு** : 20 ஹதீஸ்கள்.

## 3. அத்கார் மனனப் போட்டி.

**நூல்** : ஹிஸ்னுல் முஸ்லிம்.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவிகள் கலந்து கொள்ளல்.
- அத்கார் அதன் மொழிபெயர்ப்புடன் மனனம் செய்தல்.

**மனனம் செய்ய வேண்டிய துஆக்கள் :**

- **கனிஷ்ட பிரிவு** : 15 துஆக்கள்.
- **சிரேஷ்ட பிரிவு** : 30 துஆக்கள்.

## 4. அல்-குர்ஆன் பார்த்து ஓதுதல் போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- கனிஷ்ட, சிரேஷ்ட மற்றும் விஷேட பிரிவு மாணவிகள் கலந்து கொள்ளல்.
- தஜ்வீத் முறை பேணி, இராகமாக ஓதுதல்.

## 5. அரபுச் சொற்கள் மனனப் போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவிகள் கலந்து கொள்ளல்.
- சொற்கள் அதன் மொழிபெயர்ப்புடன் மனனம் செய்தல்.

**மனனம் செய்ய வேண்டிய சொற்கள் :**

- **கனிஷ்ட பிரிவு :**
- தரம் 1ன் பாடத்திட்டத்தை மையப்படுத்தி தேர்வு செய்யப்பட்ட 100 சொற்கள்.

- **சிரேஷ்ட பிரிவு :**
- **தரம் 2** :- க.பொ.த உயர்தரம் அறபு மொழி பாடப் புத்தகத்தை மையப்படுத்தி தேர்வு செய்யப்பட்ட 100 சொற்கள்.
- **தரம் 3** :- க.பொ.த உயர்தரம் அறபு மொழி பாடப் புத்தகத்தை மையப்படுத்தி தேர்வு செய்யப்பட்ட 200 சொற்கள்.

## 6. பேச்சுப் போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- சிரேஷ்ட பிரிவு மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளல்.
- 3 தொடக்கம் 5 நிமிடங்களுக்குள் பேச்சு அமையப் பெறல்.
- பின்வரும் தலைப்புகளில் விரும்பிய ஒரு தலைப்பை தெரிவு செய்தல்.

**தலைப்புகள் :**

- **அரபு மொழி அல்-குர்ஆன் மொழியாகும்.**
- **அரபு மொழியின் முக்கியத்துவமும் அது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும்.**
- **முஸ்லிம் சமூகத்தில் அரபு கல்லூரிகளின் அவசியமும் அதன் வகிபாகமும்.**

## 7. கவிதை போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவிகள் கலந்து கொள்ளல்.
- சுய தொகுப்பாக அமைதல்.
- 6 தொடக்கம் 8 வரிகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.

## 8. வாசிப்பு போட்டி.

**நூல் :** 3ம் தர பாடத்திட்ட புத்தகங்களில் நடுவர்களால் தெரிவு செய்யப்படும் நூல்.

**நிபந்தனைகள்:**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- சிரேஷ்ட பிரிவு மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளல்.
- எழுமாறாக குறைந்தது ஒரு பந்தி வாசிக்கப்படல்.
- இலக்கணப் பிழையின்றி திருத்தமாக வாசித்தல்.

## 9. கஸீதா போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு மாணவிகள் கலந்து கொள்ளல்.
- போட்டியாளர்களே கஸீதாவை தேர்வு செய்வர்.
- அர்த்தம் திருத்தமாக அழகான தொனியில் பாடுதல்.

## 10. மொழிபெயர்ப்புப் போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- சிரேஷ்ட மற்றும் விஷேட பிரிவு மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளல்.

**மொழிபெயர்ப்பு செய்ய வேண்டிய நூல் :**

- **தரம் 2** :- அல்-அரபிய்யது லின்-நாசிஈன், பகுதி 3.
- **தரம் 3** :- அல்-அரபிய்யது லின்-நாசிஈன், பகுதி 4.
- **தரம் 4** :- அல்-அரபிய்யது லின்-நாசிஈன், பகுதி 5.

## 11. ஸர்பு, நஹ்வு வினா, விடைப் போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- சிரேஷ்ட பிரிவு மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளல்.
- வினா விடை போட்டியாக இடம் பெறல்.
- தரம் 2 மாணவிகளுக்கு ஸர்பு வினா விடை போட்டியும், தரம் 3 மாணவிகளுக்கு ஸர்பு மற்றும் நஹ்வு வினா விடை போட்டியும் இடம் பெறல்.

## 12. சொல்வதெழுதுதல் போட்டி.

**நூல் :** 3ம் தர பாடத்திட்ட புத்தகங்களில் நடுவர்களால் தெரிவு செய்யப்படும் நூல்.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- சிரேஷ்ட பிரிவு மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளல்.
- இலக்கணப் பிழையின்றி திருத்தமாக எழுதுதல்.

## 13. வாக்கியம் அமைத்தல் போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- தரம் 3 மற்றும் தரம் 4 மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளல்.
- காட்சிப்படுத்தப்படும் படத்தை அடிப்படையாகக் கொண்டே வாக்கியம் அமைத்தல்.
- இலக்கணப் பிழையின்றி திருத்தமாக எழுதுதல்.
- 5 வாக்கியங்கள் எழுதப்படல் அவசியம்.

## 14. கிரகித்தல் போட்டி.

**நிபந்தனைகள் :**

- மேற்குறிப்பிடப்பட்ட பொதுவான விதிமுறைகள்.
- சிரேஷ்ட மற்றும் விஷேட பிரிவு மாணவிகள் மட்டுமே கலந்து கொள்ளல்.
- காட்சிப்படுத்தப்படும் Video வை அடிப்படையாக வைத்து வினாக்கள் தொடுக்கப்படும்.
- வினாக்களுக்கான பதிலை இலக்கனப் பிழையின்றி திருத்தமாக எழுதுதல் அவசியம்.

❖ **இறுதிப் போட்டி** : இன்ஷா அல்லாஹ் **26-01-2025** ம் திகதி இடம் பெறும்.

**குறிப்பு :** தரம் 4 மாணவிகளுக்கான போட்டி நிகழ்ச்சிகள் விடுமுறையின் பின்னர் நடைபெறும்.

**போட்டியாளர்கள் விண்ணப்பப்படிவத்தினை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்**

**பணிப்பாளர்**